RECEIVED
PERIODICALS DIVISION


**Editor's Note**

Please address all communication for the English pages to The English Editor, 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 Jaffna, Friday, 25th December, 1981 No. 52

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the Varany Mission Sales Centre, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*
The Manager,
'Morning Star', Vaddukoddai.


**THE MORNING STAR** *Wishes All Its Readers A Very Happy Christmas*

## G. A. Commends Diocese's Service to the Handicapped

*Address delivered by Mr. Devanesan Nesiah, the District Secretary and Government Agent of Jaffna District on the occasion of the opening of "House of Hope" the J. D., C. S. I. Home for Disabled Children at Inuvil on 5 December 1981.*

Bishop Ambalavanar, Distinguished Guests and Children —

It gives me great satisfaction to be associated in this International Year of Disabled Persons with the opening of a Home for disabled children established by the Church of South India in this location which has long been a centre of Christian Missionary service. For the Jaffna Diocese of the Church of South India, I believe this is a pioneering venture into an unfamiliar field. I have no doubt that the Church which has so eloquently borne witness to its faith in other fields of activitiy in Jaffna will respond to this new calling with the exacting care and dedication that this institution will demand.

Jaffna has for long been noted for the excellence of its educational institutions for the opportunities it provides for its more brilliant children, for the model functioning of various movements and institutions such as e. g. the Co-operative movement and Missionary Hospitals, and for the numerous very eminent men and women it has produced and who have contributed so much not only to Jaffna and to Sri Lanka but also to the international community.

May I suggest that in this pursuit of excellence we may sometimes neglect those who find it difficult or impossible to excel. Our better schools, which are the pride of Jaffna, serve as a model to those in other districts. The main thrust of the schools, quite naturally, is to produce University entrants, prize winners, eminent scholars, great sportsmen and outstanding leaders. It frequently happens that the not so brilliant who form the vast majority of the student population are neglected in camparison to the few who show signs of distinction. It is probably true of nearly all institutions and communities everywhere that the top 10% get more than their share of care and attention.

In sharp contrast we neglect the bottom 10% who, more than the others are in need of special care and attention. The economically and socially handicapped constitute a large proportion of our population but here I refer particularly to those with handicapped vision, those with handicapped hearing, those physically handicapped, and those mentally handicapped who together form an estimated 10% of our population.

We need to be reminded of the section of the U.N. declaration of the Rights to the Child which reads as follows:—

"The child who is physically, mentally or socially handicapped shall be given the special treatment, education and care required by his particular condition".

We also need to be reminded of a recommendation of the International Labour Conference of 1955 on vocational Rehabilitation of the Disabled, which reads as follows:—

"Educational programmes should take into account the special problems of disabled children and young persons and their need of opportunities, equal to those of non-disabled children and young persons, to receive education and vocational preparation best suited to their age, abilities, aptitudes and interests."

These principles flow from the article in the Universal Declaration of Human Rights which affirms that "Education shall be directed to the full development of the human personality". In our society we claim that we value our children more than all else, the handicapped no less than the brilliant. But what chance do we give for the disabled in our society to develop his or her human personality?

It is sad to note that Jaffna which is so pre-eminent in many other fields has little to be proud of in this vital area. I believe that the disabled among the Tamil speaking people of Sri Lanka are served only by the Nuffield School for the Deaf and Blind established in Kaitady by the Anglican Church, the "Ark'; for mentally retarded children established in Inuvil by the Roman Catholic Church, and one or two small institutions for deaf children established by the Lion's Club. I also believe that the facilities for training teachers to serve these institutions are not available at all in the Tamil medium in Sri Lanka.

It is estimated that only about 10% of our physically and mentally handicapped children get any kind of institutional care. Our country which is rightly proud of its system of social welfare in many other respects is woefully lacking in its provision for handicapped children. It is a matter of shame that we, in Jaffna particularly have done so little to provide for these children who should have first claims on our social conscience.

In these circumstances the establisshment of this institution is most welcome. I must congratulate the Jaffna Diocese of the Church of South India in making a small but vital entry into this field. I have no doubt that in keeping with the great traditions of service of the Church in Jaffna, this Home will indeed be a House of Hope to the children it will serve. I trust it will also serve as an inspiration for the establishment of many other homes for disabled children in Jaffna and elsewhere, by the Church and by other organizations.

Finally I thank our Bishop once again for honouring me with this invitation and for enabling me to participate in this most happy occasion.

## New Doctors

Dr. Kirupa Arnold and his wife Dr. Mrs. Ranjana Arnold have joined the services of the mission hospitals this month — Dr. K. Arnold is on the staff of Green Hospital, Manipay and Dr. Mrs. Arnold is at McLeod Hospital, Inuvil.

*An Appreciation*

### The Late Mr. D. J. Thambapillai

Thirteenth of December 1981 marked the first anniversary of the passing away of Mr. D. J. Thambapillai a former Vice-Principal of Kopay Christian College. Mr. Thambapillai had his early education at St. John's College, Jaffna where he cultivated his talents to the best of his ability. He played for the school teams in cricket and football and later as a teacher at the same school he revelled in tennis. Mr. Thambapillai earned the esteem of his superiors, colleagues and subordinates with his devout Christian principles. He always stood for the truth demonstrating by all what he said and did, what honesty produced happiness. As a teacher he was a hard task master but never resorted to shame and ridicule as punishment. He was so fair, just, considerate and companionable that his students have a genuine esteem for him.

The passions that governed Mr. Thambapillai's life have been the longing to love, the search for knowledge and great pity for the suffering. He never compared himself with others as he believed that it makes oneself bitter or vain for always there will be greater or lesser persons. He enjoyed his plans and achievements. He strived for high ideals. He nurtured strength of spirit to shield in sudden misfortune. He never distressed himself with dark imaginings as he was at peace with God. He was always serious but never took himself seriously. His subtle sense of humour was enjoyed by one and all. Many a friend and past pupil who always sought Mr. Thambapillai's advice and guidance even during his retired days miss him very much along with his dear ones.

May his soul rest in peace, safe in the arms of Jesus.

## New Bishop of Medak



The Synod Board of the Church of South India which met recently has appointed the Rev. Dr. P. Victor Premasagar as the new Bishop of the Medak Diocese of the C. S. I. to succeed Rt. Rev. Prasada Rao who retired a few months ago.

Dr. Victor Premasagar is a well known and outstanding Church leader in India. He has been for the last two years the General Secretary of the Synod of the C. S. I. In this capacity he visited our own Diocese in February, 1981 and was the Chief Speaker at the Sessions of the Diocesan Council. Dr. Premasagar is one of the leading theologians in India and was Principal of the Andhra Christian Theological College from 1973 to 1980. His special field of studies has been the Old Testament. Dr. Premasagar after obtaining his B. D. degree from the United Theological College, Bangalore went to Cambridge where he obtained his theological Tripos between the years 1969 and 1972. Dr. Premasagar is married and has one daughter. He is 54 years of age.


### Nuffield School for the Deaf and Blind

We are looking for a dedicated, young, Christian, male graduate with leadership qualities to serve the blind at the above school. Suitable person will have opportunity for training abroad, after a period of probation. Those interested in this unique opportunity for Cristian service, please contact me at,

20, Canon Somasundaram Avenue,
Chundikuli.

K. Nesiah
Manager.

### Wanted Teachers

*Minimum qualifications:*
G. C. E. (O/L) with 5 credits and pre-school training,
*or*
G. C. E. (A/L) with 4 passes.

*Added qualifications:*
Western Music, Dance, Drama, Sports.

*Requirement:*
Should be willing to reside in the hostel.

*Apply to:*
The Principal, Nuffield Shcool for the Deaf and Blind, Kaitadi, before 6th January 1982.

“ பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது ”.


# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது.

“ நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் ஜனத்துக்கும் இழிவாம் ”

மலர் 141 ] 25 — 12 — 1981 [ இதழ் 52


## காலம் நிறைவேறினபோது!

நத்தார்க் குதூகலம் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது நம்மை மீட்க அவதரித்த இயேசுபாலகனை வழிபட ஆயத்தமாகின்றோம். இயேசுவின் வருகையைக் குறித்துப் பவுல் அப்போஸ்தலன் பின்வருமாறு எழுதினார் :

“காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார் ”

கிறிஸ்துவின் வருகைக்கு பல்லாயிரக்கணக்கான வருடங்களாக ஆயத்தங்கள் நடைபெற்றன. யூதர்கள் மத்தியிலே தோன்றிய தீர்க்கதரிசிகள் இதற்கான ஆயத்தங்களைச் செய்துவந்தனர். எசேக்கியேல், எரேமியா, ஏசாயா, சகரியா போன்ற தீர்க்கதரிசிகள் மேசியாவின் வருகைக்கு வழியைச் செப்பனிட்டுக்கொண்டிருந்தனர். எரேமியா புதிய உடன்படிக்கையை எடுத்து விளக்கினார். எசேக்கியேல் கடவுளின் நீதியையும், அவர் வரலாற்றின் நாயகன் என்பதனையும் எடுத்துக் கூறினார். அவர்களுக்குப் பின் வந்த இரண்டாவது ஏசாயாவோ ‘ துன்புறுந்தொண்டன் ” என்னும் அரிய சிந்தனையை வழங்கினார். துன்புறுந்தொண்டன் பாடல்களில், முதன்முதலாகச் சிலுவையின் நிழல் தெரிகின்றது என்று அறிஞர்கள் கூறுவார்கள். “ நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகின்றோம்” என்றார் ஏசாயா. இஸ்ரவேல் ஜனங்கள் எதிர்பார்த்த மேசியா எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும் என்று இவர் கூறுவதனைக் காணலாம்.

தீர்க்கர்கள் மட்டுமன்றித் தத்துவஞானிகளும் தளபதிகளும் பேரரசர்களும் கூட கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தம் செய்திருந்தனர். கிரேக்க தத்துவஞானிகள் மெய்யானவைகள் எல்லாம் கருத்துலகத்திலேதான் இருக்கின்றன; அவைகளின் நிழலாட்டமே இவ்வுலகத்தில் இருக்கின்றன என்ற சிந்தனைக்கு வளர்ச்சியடைந்திருந்தனர். கருத்துலகில் உள்ள மெய்யான ஒளி இயேசுவின் வடிவில் பூவுலகத்திற்கு வந்தது.

கிரேக்க நாட்டின் தலைசிறந்த தளபதியான மகா அலெக்சாந்தர் ஐரோப்பாவிற் பெரும் பகுதியையும் சின்னாசியாவையும் கைப்பற்றி அங்கெல்லாம் கிரேக்க மொழியைப் பரப்பியிருந்தான். கிரேக்க மொழியுடன் ஐரோப்பா முழுவதும் சமயத்தைப் போதிப்பது எளிதாகிவிட்டது.

உரோமத் தளபதிகளும் தமது பணியைச் செய்து முடித்துவிட்டிருந்தனர். அவர்களுடைய வீரத்தினால் உள்ளூர்ச் சர்ச்சைகள் அடங்கின. ஐரோப்பா முழுவதும் ஒரு வலுவான அரசின் கீழ் வந்தது. PAX ROMANA என அவர்கள் அளித்த சமாதானம் கூறப்பட்டது. அவர்கள் சமாதானத்தை மட்டுமன்றிச் சிறந்த வீதிகளையும் மாவட்ட நிர்வாகமுறையையும் அமைத்திருந்தனர். கிறிஸ்துவின் நற்செய்தி பரவ அவை வாய்ப்பாக இருந்தன.

பலஸ்தீனாவை ஏரோது ஆண்டுவந்தான் நாட்டுமக்கள் தமது விடுதலைக்காகப் போராடி வந்தனர். செலோத்தேயர் வன்முறையினால் சுதந்திரத்தைப் பெற முயன்றனர். அன்னாள், சிமியோன், யோசேப்பு போன்றவர்கள் இஸ்ரவேலின் மீட்புக்காக ஆவலோடு ஜெபம் பண்ணி வந்தனர். இவ்வாறு உலகமே மேசியாவின் வருகைக்கு ஆவலோடு காத்திருந்தது. அத்தகைய சூழலிற்றான் பெத்லகேமில் கன்னி மரியாளிடத்தில் இயேசு பாலகன் பிறந்தார்.

---

செய்திகள்

### மானிப்பாய்த் திருச்சபை 150ஆம் ஆண்டு நிறைவு விழா

தெ. இ. திருச்சபையின் யாழ். ஆதீனத்தைச் சேர்ந்த மானிப்பாய்த் திருச்சபை தனது 150 ஆம் ஆண்டு நிறைவு விழாவை இம்மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமையன்று அதன் ஆலயத்தில் நடத்தப்பட்ட ஒரு தோத்திர திருவிருந்து ஆராதனையுடன் கொண்டாடியது. 1831 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே மானிப்பாயில் ஒரு சபை இருந்ததும், வழிபாட்டு ஆராதனைகள் நடத்தப்பட்டுக் கொண்டு வந்ததும் சரித்திரபூர்வமான காரியங்கள். எனினும் தனிப்பட்ட சபைகளாக 1831ஆம் ஆண்டில் யாழ்ப்பாண ஆதீனமாய் இப்போவிருக்கும் எல்லைகளுக்குள் தம் வரலாற்றைத் தொடங்கிய ஐந்து சபைகளில் மானிப்பாயும் ஒன்று. அந்தக் கட்டத்திலிருந்து வந்த 150 ஆண்டு நிறைவேற்றமே இப்பொழுது கொண்டாடப்படுவது.

தோத்திர ஆராதனை காலை 8-45 மணிக்கு ஆரம்பமான ஒரு சபையார், குருமார் பவனியுடன் தொடங்கியது. ஆதீன அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்கள் ஆராதனைக்குத் தலைமை தாங்கி நடத்தினார்கள். சபைக் குரு கனம் சாம் தம்பு அவர்கள் உதவி புரிந்தார்கள். சிலகாலம் அச்சபையிற் கடமையாற்றிய கனம் N. W. G. சுகுணராஜா அவர்கள் இதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஒரு தோத்திர செப மாலையில் சபையாரை நடத்தினார்கள். முன்பு இச்சபையிற் கடமையாற்றிய கனம் S. P. ஜெயசிங்கம், கனம் N. W. G. சுகுணராஜா ஆகியோர் திருவிருந்து பரிமாறுதலில் உதவி புரிந்தார்கள். மானிப்பாயைச் சொந்த இடமாகக் கொண்ட கனம் சந்திரன் ஆர்னல்ட், கனம் J. C. மேதர் ஆகியோர் வேதப் பாடங்கள் வாசித்துதவினர்.

மகாகனம் அத்தியட்சர் அவர்கள் உபாகமம் 33 : 26, 27 ஆம் வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு பிரசங்கம் செய்தார்கள். கடவுளுக்கு நாம் நன்றி செலுத்துவதற்கு ஒரு பிரதான நியாயம் அவர் நமக்கு அடைக்கலமாயிருந்ததே. எனினும் அநாதி கடவுள் உனக்கு அடைக்கலம் என நாம் கூறும்போது, பிற மதத்தவரும் கடவுள் தமக்கு அடைக்கலம் எனச் சொல்லக் கூடும் என நினைவு கூருகிறோம். எனினும் இது இஸ்ரவேல் சனத்திற்கு ஒரு தனிப்பட்ட கருத்தைக் கொடுக்கும். அடைக்கலமான அந்த அநாதி கடவுளே சரித்திரத்தின் கர்த்தாவாகவும், அதை நடத்தி, ஆண்டுகொள்ளும் ஒருவராகவும் இருக்கிறார் என்பது அவர்களின் திடமான விசுவாசம். இந்தச் சபைக்காக நாம் நன்றி கூறும் வேளையில் கர்த்தர் இத்தனை ஆண்டுகளும் அதன் மேற் பொழிந்த ஆசீர்வாதங்களை நாம் நினைவுகூருவதோடு, இந்தச் சபைக்கூடாகவும், சபையோடு இணைந்து சேவையாற்றிய ஸ்தாபனங்களுக்கூடாகவும் இந்தக் குடா நாட்டிற்கும் நாடு முழுவதுக்கும் கொண்டு வரப்பட்ட நன்மைகளையும் நினைவுகூருகிறோம். நினைவு கூர்ந்து கடவுளுக்கு நன்றி கூறுகிறோம்.

கடவுள் கடந்த காலத்திற்கு மாத்திரம் கடவுளாயிராமல் வருங்காலத்திற்கும் கடவுளாயிருக்கிறார். ஆதலால் வருங்காலத்தைப் பற்றியும் நாம் சிந்திக்க ஏவப்படுகிறோம். சபைகளை இரண்டு வகையாய்ப் பிரிக்கலாமென்பர். முதலாவது சபைக்குச் சேர்ந்த கட்டடங்களையும் பிற ஆதனங்களையும் பராமரித்து நடத்திக் கொண்டு வரும் சபைகள். மற்றது இவைகளோடு கூட, அல்லது இவற்றிலும் முதன்மையாக, வெளியே சென்று கர்த்தரின் நற்செய்தியைப் பரப்பி வரும் சபைகள். இதுவே நம்மெல்லாருக்கும் கொடுக்கப்படும் பிரதான உத்தரவாதம். இந்தச் சபையும் இந்த மகத்துவமான சேவையில் இன்னும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமெனக் கர்த்தரிடம் மன்றாடிக் கொள்ளுகிறோம். இவ்வாறு மகாகனம் அத்தியட்சர் அவர்கள் தமது அருளுரையிற் கூறினார்கள்.

ஆராதனையின் முதற் கட்டமாக, ஆலயத்தின் உபயோகத்திற்காகக் Curtis குடும்பத்தினரால் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி அமைப்பு ஒன்றையும் அநாயதாரணராக இன்னொரு அன்பர் கொடுத்திருந்த மின் விசிறியையும் அத்தியட்சர் அவர்கள் பிரதிஷ்டை செய்து, உபயோகத்திற்கு ஆரம்பித்து வைத்தார்கள். அத்தியட்சர் அவர்களின் தேவ ஆசீர்வாதத்துடன் ஆராதனை முடிவடைந்தது.

ஆராதனையைத் தொடர்ந்து சமுகமாயிருந்த சபையாருக்கும் பிற சபைகளின் அன்பர்களுக்கும் தேநீர் உபசாரணை நடத்தப்பட்டது.

---

### கிறிஸ்மஸ் பற்றிய பத்துக் கற்பனைகள்

(ஒரு சபைப் பத்திரிகையில் பிரசுரமான ஆங்கில மூலத்தைத் தழுவியது)

(i) “கிறிஸ்(து) மஸ்” என்பதிலிருந்து கிறிஸ்துவை அகற்றிப் போடாதிருப்பாயாக. Christmas என்பதை X' mas எனச் சொல்லாதே. X என்பது தெரியப்படாத ஒன்றைக் குறிக்கும்.

(ii) உன் ஆத்துமாவைக் கிறிஸ்மஸ் சம்பவத்திற்கு ஆயத்தம் செய்வாயாக. ஆத்தும காரியங்களை மறந்துபோகக் கூடிய அளவிற்குக் கொடைகளின்மேற் செலவிடாதே.

(iii) கிறிஸ்துவின் இடத்தைக் கிறிஸ்மஸ் தாத்தாவிற்குப் பறிகொடுக்காதிருப்பாயாக. அது ஆத்மீகக் காரியங்களைப் பறிகொடுப்பதற்குச் சமனாகும்.

(iv) கடைச் சேவையாளர் கடிதச் சேவையாளர், வியாபாரிகளின்மேல் குற்றம் போடுவதும், அநாவசிய வேலை கொடுப்பதுமான சுமைகளைச் சுமத்தாதிருப்பாயாக.

(v) நீ கொடுக்கும் கொடையுடன் உன்னையும் சேர்த்துக் கொடுப்பாயாக. இது உன் கொடையின் மதிப்பை நூறு மடங்காக அதிகரிக்கும்; பெறுபவரும் எப்பொழுதும் அக் கொடையைப் பவுத்திரப்படுத்துவார்கள்.

(vi) கிடைக்கும் கொடைகளை அவற்றின் விலையைக் கொண்டு மதிப்பிடாதிருப்பாயாக. விலை மிகக் குறைந்த பொருளுங்கூடக் கொடுப்பவரின் அன்பைக் குறிக்கலாம்; அதுவே வெள்ளியிலும் பொன்னிலும் விலையேறப்பெற்றது.

(vii) தேவைப்பட்டோர் தேவையைத் தீர்ப்பதில் பாராமுகம் காட்டாதிருப்பாயாக. நீ கொடுத்தாலொழியப் பசியினாலும் குளிரினாலும் அவதிப்படக் கூடியவருடன் உன் நன்மைகளைப் பகிர்ந்துகொள்.

(viii) ஆலயத்தின் காரியங்களை அசட்டை பண்ணாதிருப்பாயாக. இக்காலத்தின் உண்மையான கருத்தை அதன் ஆராதனைகளே உனக்கு எடுத்துக் காட்டும்.

(ix) ஒரு சிறு பிள்ளையைப் போல இருப்பாயாக. ஆத்துமாவில் ஒரு சிறு பிள்ளையைப் போல் நீ ஆகும் வரைக்கும் பரலோக இராச்சியத்தில் நீ பிரவேசிப்பதற்கு ஆயத்தமில்லையெனச் சிந்தித்துக்கொள்.

(x) உன் இதயத்தைக் கிறிஸ்துவுக்குக் கொடுப்பாயாக. கிறிஸ்மஸ் காரியங்களின் நிரலிலே அவரையே முதலாவதாகப் போட்டுக்கொள்.

முடிவுரை: இந்தக் கற்பனைகளைக் கைக்கொள்ளுபவருக்குக் கிறிஸ்மஸ் ஆசீர்வாதம் நிறைந்ததாயமையும்,

## அருட்பிறப்பு — ஒரு சிந்தனை

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." யோவா 3:17

சரித்திரத்தில் கிரியை செய்கிற கடவுளை கிறிஸ்துவில் நாம் காண்கிறோம். இந்த ஜீவனுள்ள தேவனை நமது அனுபவத்திற்குட்படுத்தி அவரை நாம் கண்டறியத்தக்கதாக வெளிப்படுத்த வந்த குமாரன் யேசுகிறிஸ்து தமது கிரியையைச் செய்யும்போது என்ன முறையாயதைச் செய்யச் சித்தங்கொண்டு வந்தார்?

நமது மகுட வாக்கியத்தில் அது காணப்படுகிறது அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே கடவுள் அவரை அனுப்பினார். இரட்சிப்பே அவரது வேலை. Salvation is the plan of action. (லூக்கா 19:10) "இழந்து போனதைத் தேடவும் ரட்சிக்கவுமே மனுமைந்தர் வந்திருக்கிறார்." அன்புள்ள தெய்வத்தின் சகவாச உறவிலிருந்து, அவர் தமது சித்தத்தில் மனிதனுக்கு நியமித்து வைத்த ஸ்தானத்திலிருந்து, யார் வழுவிப் போனாரோ, யார் விழுந்து போனாரோ, யார் இழந்து விடப்பட்டாரோ அவனைத்தேடி இரட்சிப்பதே அவரது வேலை.

இவ்வேலையை அவர் எவ்விதம் செய்தார்? முழு மனிதனையும் இரட்சிப்பவராயிருந்தார். மனிதன் சரீரம், மனம், ஆத்துமாவாகிய மூன்றினாலும் ஆக்கப்பட்டவன். இம்மூன்றில் எதிலே விழுகை ஏற்பட்டிருந்ததோ அதிலே இரட்சிப்புக் கொடுத்தார்.

1. சரீரம் — சரீர சொஸ்தம் கொடுக்கும் பணி செய்தார்.
2. மனம் — அசுத்தாவிகளைத் துரத்தினார்.
3. ஆத்துமா — பாவத்திலிருந்து மீட்பு அருளினார். உதாரணம்: சகேயு, மகதலேனா மரியாள்

ஆனால் அவருடைய இரட்சிப்பு இதோடு முடியவில்லை. அவர் அருளிய ஒரு விசேஷ இரட்சிப்பை நாம் உணருகிறதில்லை. அவர் கிரியை எப்போதும் தீயதிலேயிருந்து நல்லதிற்கு இரட்சித்ததல்ல. அவர் பலவேளைகளிலும் நல்லதிலிருந்து அதிலும் சிறந்த நன்மையானதிற்கு மனிதரை உயர்த்தி இரட்சித்தார். தெய்வம் மனிதனுக்கு விசேஷ தாலந்துகளைக் கொடுத்திருக்க அவன் அவைகளைப் பயன்பட உபயோகிக்க அறியாமல் சிறந்த நன்மையை மறந்து குறைந்த நன்மையோடு திருப்திப்பட்டிருப்பது பாவம். அப்படிப்பட்டவர்களை யேசு இரட்சித்தார். இரட்சிக்கப் பிரயாசப்பட்டார்.

1. பேதுரு — மீன்பிடிப்பது நல்லது; ஆனால் மனுஷரைப் பிடிப்பது இன்னும் நல்லது.
2. பரிசேயர் — ஓய்வுநாளை ஆசரிப்பது நல்லது; ஆனால் ஓர் ஆத்துமாவை விடுதலையாக்குவது இன்னும் நல்லது.
3. விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீ — குற்றத்திற்குத் தண்டனை கொடுப்பது நல்லது; குற்றம் செய்தவருக்கு திருந்தத் தருணம் கொடுத்துத் திருத்துவது இன்னும் நல்லது.

நன்மையிலிருந்து சிறந்த நன்மைக்கு இரட்சிப்பதையே வலியுறுத்த விரும்புகிறேன். இன்று நமக்குத் தேவைப்படுவது குறைந்த நன்மையிலிருந்து சிறந்த நன்மைக்கு இரட்சிக்கப்படுதலேயாகும்.

தன் குடும்ப காரியத்தைச் சிறப்பாகப் பார்ப்பது நல்லது; ஆனால் பிறர் குடும்பங்களுக்கும் பிரயோசனமாய்ச் சீவிப்பது இன்னும் நல்லது.

மற்றவர்களுக்குத் தீமை செய்யாதிருப்பது நல்லது; ஆனால் மற்றவர்களுக்கு உடன்பாடாக நன்மை செய்வது இன்னும் நல்லது.

பணத்தை வீணாகச் செலவிடாதிருப்பது நல்லது; ஆனால் பணத்தை தெய்வ காரியங்களுக்கு செலவிடுவது இன்னும் நல்லது.

திருச்சபைக் கட்டிடங்களைப் பேணிக்காப்பது நல்லது; ஆனால் திருச்சபை சமுதாய சீர்திருத்தங்களில் ஈடுபடுவது இன்னும் நல்லது.

கிறிஸ்து இரட்சகராக நமக்கு கொடுக்கப்பட்ட நாளை நாம் கொண்டாடும் இக்காலங்களில் அவர் தாமே தீமையினின்று நன்மைக்கு மாத்திரமல்லாமல், குறைந்த நன்மையிலிருந்து நிறைந்த நன்மைக்கும் நம்மை இரட்சிப்பாராக.

— சந்திரன் ஆர்ணல்ட்.

## கொடுப்பதே கிறிஸ்மஸ்

கிறிஸ்மஸ் ஒரு நாளல்ல — ஒரு காலம். கிறிஸ்மஸ் நாமெல்லோரும் ஆசையோடு எதிர்பார்க்கும் ஒரு காலம். கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள், கிறிஸ்மஸ் மரம், கிறிஸ்மஸ் நன்கொடைகள், கரோல் பாடகர், கடை வீதிகளில் பலவர்ண வெளிச்சங்கள், கண்ணைக் கவரும் சோடனைகள், வியாபார முஸ்திபு, பலவித தின்பண்டங்கள், பல மாதிரியான உடைகள், சிறுவருக்கு விதம்விதமான விளையாட்டுப் பொருட்கள், ஜனக் கூட்டங்கள் — இவையெல்லாம் கிறிஸ்மஸ் காலத்தோடு சம்பந்தப்பட்டவை ஆகிவிட்டன.

இன்று இவையில்லாமல் கிறிஸ்மஸ் கிறிஸ்மஸ் அல்ல என்று சொல்லக்கூடிய கட்டம். கிறிஸ்மஸ்சோடு சம்பந்தப்படுகிற இந்த அம்சங்கள் முற்றிலும் கருத்தற்றதல்ல. கிறிஸ்மஸ் பற்றிய உண்மைகளை இவை வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்மஸ் பப்பா பிறருக்கு நன்கொடை அளிப்பதிலேயே சந்தோஷப்படுவர். இது பிறருக்குக் கொடுப்பதன் சந்தோஷத்தையும் கடமையையும் வலியுறுத்துகிறது. வீடுகளில் காட்சியளிக்கும் கிறிஸ்மஸ் மரம் அவ்வீட்டார் மற்றவர்களை உபசரிக்கும் இதயம் படைத்தவர்கள் என்றும், தங்கள் சந்தோஷத்தினை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுவோர் எனவும் தெரிவிக்கிறது. வாழ்த்து மடல்கள், வீடுகள் தோறும் சென்று வாழ்த்தும் கரோல் பாடகர்; பல வேலை ஸ்தாபனங்களில் கிறிஸ்மஸ் பப்பா பரிசளிப்பும் மக்களை ஓர் அதிசய பரஸ்பர அன்பில் இணைக்கிறது. தெருக்களில் பெருங் கூட்டத்தின் மத்தியில் ஒருவரை ஒருவர் நெருங்கி அங்குமிங்குமாக சென்று கிறிஸ்மஸ் பண்டிகைக்கான பொருட்களை வாங்கும் அனுபவம்கூட நாம் தனிமையானவர்களல்ல — மானிடர் மத்தியில் நாமும் ஒருவர் என்பதை வற்புறுத்துகிறது. இயேசு பிறந்தபோது தூதனால் சொல்லப்பட்டதுபோல கிறிஸ்மஸ் "எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கும் நற்செய்தி"யாக திகழ்கிறது. கிறிஸ்மஸ் சாதி மத இன பேதங்களை ஒழித்துக்கட்டுகிறது. பெருமை, பொறாமை பகை, விரோதம், சுயநலம் பறந்து போகச்செய்கிறது. நல்லெண்ணமும் நட்பும் அன்பும் ததும்பும் நிலையை உருவாக்குகிறது. தம்மையே மறந்து, மற்றவர்களுடைய நலனுக்காகவும் சந்தோஷத்திற்காகவும் தங்கள் நேரங்களையும் தாலந்துகளையும் பணத்தையும் தாராளமாக வாரி இறைக்கும் மனப்பான்மை எல்லாரிலும் தோற்றுவிக்கிறது.

சார்ல்ஸ் டிக்கன்ஸ் என்பவர் இயற்றிய "கிறிஸ்மஸ் கரோல்" என்ற நூலில் ஸ்குரூஜ் (Scrooge) என்ற பாத்திரத்தைப்போல் ஒரு சிலர் தங்கள் இருதயங்களை அடைத்துக்கொள்ளவும், பணப்பையை இறுகப் பிடித்துக்கொள்ளவும் பிரயாசைப்படுகின்றனர். என்றாலும் கூடாமற் போவதில் வியப்பில்லை. ஏனெனில் பிரமாண்டமான கடவுளே மானிடர் மேல் அளவு கடந்த காதல் கொண்டு தம்மையே மானிடருக்கு கொடுத்த காட்சியே கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் நடுமையம்.

"சருவத்தையும் படைத்தாண்ட
சருவவல்லவர் — இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில்
தலைசாய்க்கலானார்."

இத் தெய்வீக அன்பின் காட்சியே மனிதரின் உள்ளங்களை உருகச்செய்து, இன்றைய பயங்கர உலகத்தை அன்பும், சமாதானமும் சந்தோஷமும் நிரம்பிய உலகமாய் மாற்றக்கூடும்.

## கிறிஸ்மஸ் கொடை விழா — நம்பிக்கை இல்லம்

தெ. இ. திருச்சபை, யாழ். ஆதீனத்தினால் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட வலது குறைந்த பிள்ளைகளுக்கான நம்பிக்கை இல்லம் என்ற இல்லத்தில் உடுவில் Y. M. C. A. இயக்கத்தினர் விடுதியின் பிள்ளைகளுக்கான கிறிஸ்மஸ் கொடை விழா ஒன்றை இம்மாதம் 19ஆம் திகதியன்று நடத்தினர். இந்த இயக்கத்தினரும் உடுவில் இணுவில் சபையாரிற் பலரும் சமுகமளித்தனர்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் கிறிஸ்மஸ் கொடையாகப் பாவனைக்குரிய விலையுயர்ந்த கொடைகள் கொடுக்கப்பட்டன. இல்லத்தின் பிள்ளைகளுக்கும் வந்திருந்த பிறருக்குமான ஒரு தேநீர் கொண்டாட்டமும் நடத்தப்பட்டது. வலது குறைந்தவராய்ப் பலவகையிலும் தாழ்ச்சியடைந்திருந்த பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் இப் புனர்வாழ்வு மெச்சுதலுக்குரியதென யாவரும் கண்டனர்.

நடத்தப்பட்ட கொடை விழாவும் இப் பிள்ளைகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதாயிருந்தது.

## சத்திரக்காரன்

(யூஜின் கிளாக் அவர்களின் ஆங்கிலக் கவி — தமிழாக்கம்)

பண்டைய காலில் பெத்லகேம் ஊரில்
சத்திரம் வைத்திருந்தான் அன்றொருவன்,
யோசேப்பு மரி, குழந்தைக்கிடமில்லை
என்றுரைத்தான், சத்திரத்தின்
கதவுதனை தாள் போட்டு
அகன்றிடவே பண்ணினான்.
படுக்கையில்லாத் தொழுவத்தில்
வைக்கோலில் உறங்கினரே.
இன்று நீயவரே சத்திரம்
வைத்திருப்பாயா?
உட்புறமே தானுண்டு;
இயேசுதாம் வெளிப்புறம் —
அழைப்பாயோ உன் அவரை?

இயேசு வந்தார் அன்றொருநாள்
மனுவுருவில்
பாவத்துக்காய் மரிக்கவும் தான்;
ஆவி உருவில் நின்று கொண்டு
உன்னை வர வேண்டுகிறார்.
சத்திரம் வைத்திருப்போன் நீதானே?
உன் இதயம் சத்திரம் தான்.
அழைத்திடவோ, துரத்திடவோ,
இருவகையும் உன் தெரிவே.
இயேசுவே மனு உருவில் வந்தார்
பாவம் நீக்கிடவே;
வாசலை விரிவாக திறந்திடுவேன்
வாரும்! இயேசுவே! வந்தென்னில்
உறைந்தருளும்.

தமிழ் ஆக்கம்: — ஜே. ஜே. இ.

## அவர்கள் கண்ட கிறிஸ்மஸ்

இந்நேரம் வந்ததே தய்யா? —
என்னய்யா சுவாமி!
இந்நேரம் வந்ததே தய்யா?

அளவில் லாதவர் நீரல்லோ! —
நீர் தேடி வந்த
அடிமைகள் நாங்களல்லவோ!
பழவேட மல்லா லிந்தப் பவத்தைத்
துரத்தி வெல்லத்
தலையணை ஒரு கல்லோ? —
சப்ரமஞ்சம் புல்லோ?

[இதைப் பாடியவர் வடக்கன் குளத்தைச் சேர்ந்த ந. நல்லூப்பிள்ளை. இவர் வண்டிக்காரன் புதூரில் சிவன் கோவிற் பூசாரியாயிருந்து குணப்பட்டுக் கிறிஸ்தவரான நரசிங்கமூர்த்தி யாபிள்ளையின் இரண்டாவது குமாரன். 1807 ஆம் ஆண்டில் மரித்தவர்]

* * *

அரசிளங் குமாரியே,
அழகுட விருக்கவோர் ஆசைகொண்டு
உள்ளழகும் வெளியழகும் ஒருங்கே
பூண்டு
ஒப்பற்ற ராணியாக விழைகிறுயோ?

அப்படியானால் இதைக் கேள்:

மௌனியா யிருக்குமோர் இறைவனுக்கு
மனுக்குலம் நிறவுமந்த மாளிகை
போல்
சத்தமும் சந்தடியும் ஒன்றுசேர,
மெத்தவும் சுடுமொழிகள் மருவா
ரோப்ப,
சுத்தியலும் சம்மட்டியும் பொருது
கொள்ள,
இத்தலைக்கும் எஃகுகல்லு இணைந்
தொலிக்க, —
அந்தகைய ஆலயமாய் அமைவதல்ல
அருளிறைவன் உறைவிடமாய் விரும்புவது.

அந்தரங்க உள்ளத்திலே ஆரம்பித்து,
சந்ததமும சாவதானமா யிருந்து
எந்தையரின் தூய்மையதை யொப்ப
தான
பந்தமறு இதயந்தனை ஆக்குவை
யால் —
கட்டுங்கல் ஒவ்வொன்றும் ஒரு
செபமாய்
இட்டிணைந்துக் கட்டியபின் இதய
மதை
மட்டிடுமுன் அகந்தையெலா மறவே
மாய்த்துப்
பட்டென்று விளங்கிட வுன் பாவம்
போக்கி
நித்தமுமுன் செபதபத்தில் தரித்திருந்து
பத்தியுடன் பரமனுக்காய்ப்
பார்த்திருப்பாய்.

நறுமணமே வீசுமொரு உறைவிடமாய்
நமபரனின் அருள்பெற்று
ஆக்குவையேல்
எம்பெருமான் எமைமீட்க
வருங்காலன்றே
தம்மிடமாய் இதயமதைத்
தெரிந்தெடுப்பார்.
கல்லுகளும் இரும்பெஃகும்
சேர்ந்திணைக்கும்
நல்லதொரு வீடென்றுல் வெளியழகே.
சொல்லரிய அழகெனுல், அதுகேளீர்
வல்லவனார் ஆலயத்தற் கொத்த
நெஞ்சே,

[ஜோன் ஒக்சென்ஹாம் எழுதிய ஆங்கில கவிதையைத் தழுவி யெழுதப்பட்டது.]

*A Message from the Archdeacon of Jaffna*

## Unto us a child is born

— *Isaiah 9:6*

Once in the history of the vast universe an incredible event of great awe and wonder occured. God the Creator — who even at this moment sustains the stars and planets in their precisely defined courses in the unimaginable vastness of space, God whom space cannot contain — the God for whom there is no present, past or future — this almighty and glorious God came into space and time and chose this little speck in space, this our tiny world and became a lowly frail human being like us. He became the lowliest of the lowly, being born to an ordinary village lass in a dilapidated cattle shed and was wrapped in swaddling clothes and laid in a trough the cattle ate from.

As we look upon this child deep and staggering truths about God are revealed to us.

**A Child is a Source of Joy.**

I was travelling in a bus one morning. All was quiet in the bus. Some were anxiously scanning the papers. The grave and moody faces of some suggested that the burden of life seemed very heavy on them. An air of heaviness hung over the group in the bus. Then a young mother with a sweet little child boarded the bus. The innocent little one was all smiles, all laughter. It looked round and began to tug and pull at people within its reach. The atmosphere in the bus changed as everybody was attracted by the little child's antics and the expresion of joy and happiness. Everyone seemed to forget themselves and were caught up by the contagious smile and laughter. God in Jesus brought joy to all everywhere. At a wedding he changed ordinary water into wine and made the couple happy. Mothers were made happy as He took little children into His arms and blessed them. He healed many that were sick with various diseases. He brought hope to the hopeless, and comfort to the lonely. He was the most joyous person with whom to be associated was a continuous joy.

**A Child is the Source of Peace.**

Isaiah calls this child Prince of Peace. Trench fighting was the normal method used in the first World War. It happened that two armies were entrenched opposite each other. There was cross fire going on between them. Suddenly the firing stopped. There was a perfect silence. What happened? There was a farm house situated between the trenches. A child had crept out of the house on to the lawn in front. It was the sight of that child that had brought the firing to a halt. In the silence a soldier from one of the trenches rushed and picked up the child and carried it into the farm house. There was a mighty cheer from both trenches. Jesus brings peace to a world rift and torn asunder by pride and selfishness. He brings peace to families, societies, and nations. The last legacy that Jesus left to us just before His death was Peace. "Peace I leave with you, my Peace I give unto you', He said.

**The Child is the Most Helpless Being**

A child is the weakest being we can think of. A few days' neglect means the child will die. We have to do everything for the child. The babe of Bethlehem reveals to us that God is powerless (what the world means by power). But the weakness of God is the greatest power that the world has ever seen. Jesus never coerced, compelled or pressurised. Love was His answer to every strife. "If I be lifted up I will draw all men unto me", He said. A helpless God on a disgusting Cross is the way of Salvation for the world. Today Jesus is as helpless as He was on the first Christmas day. We have to do everything for Him in order His Kingdom of Love, Brotherhood, Peace and Justice may be established.

The Babe of Bethlehem calls us to spend and be spent for the happiness of others, He challenges us to make Love the spring of all our actions, and strive for reconciliation and peace at every level of human life. Not Kings, not Presidents, not Dictators, but "a little child shall lead them" will be true of His Kingdom.

*Sam D. Horshington.*

---

*Devotional*

## Communion

